## கிழக்கு மாகாண சபை - 2012

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிழக்கு மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டின் அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

(அ) மாகாணசபையின் 2012 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2004 பெப்ரவரி 24 திகதியிட்ட 01/2004 இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின்படி 2013 மார்ச் 31 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இவை 2013 யூன் 03 இலேயே கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) ஏனைய நிதிக்கூற்றுக்கள்

2012 மார்ச் 31 இல் உள்ளவாறான ஏனைய நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலின் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | கணக்குகள் | 2012 ஆம் ஆண்டிற்கானது<br>நிதிக் கூற்றுக்களின் மொத்த எண்ணிக்கை | 2013 மார்ச் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை | 2013 மார்ச் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்படாத நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 33 | 21 | 12 |
| (ii) | மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்குகள் | 33 | 19 | 14 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | வர்த்தக முற்பணக் கணக்கு முயற்சிகள் | 09 | - | 09 |
| (iv) | நிதியக் கணக்குகள் | 02 | 02 | - |
| (v) | வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை | 01 | - | 01 |
| (vi) | முன்பள்ளி கல்விப் பணியகம் | 01 | - | 01 |
| | | 79 | 42 | 37 |

(இ) மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பித்தல்

(i) 2004 பெப்ரவரி 24 ஆந்திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின்படி, மாகாண சபையின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

(ii) 2004 பெப்ரவரி 24 ஆந்திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின்படி கிழக்கு மாகாண சபையின் கீழுள்ள 45 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந்திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், 28 மாகாண சபை திணைக்களங்களால் 2013 செப்தெம்பர் 16 வரைகூட 2012 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கருத்துரைகள்

ஏற்பாடுகளை முழுமையாக அல்லது பகுதியளவில் பயன்படுத்தாமை, வருடாந்த மதிப்பீடுகளில் ஏற்பாடு இல்லாமல் செலவினங்களைச் செய்தல், கணக்குகளில் நிலுவையான பொறுப்புக்களின் விடுபாடு, மீண்டெழும் செலவினத்தை மூலதனச் செலவினத்திற்குச் சாட்டுதல் செய்தலும் அதே போன்று மறுதலையாகச் செய்தலும், மூலதனச் செலவினத்திற்கு விபரங்கள் சமர்ப்பிக்காமை, சேமிப்புக்களுக்குப் போதிய விளக்கங்கள் அளிக்காமை மற்றும் மாகாணத்திறைசேரிப் ஏடுகளுடன் திணைக்களப் பதிவேடுகளை இணக்கம் செய்யாமை போன்ற பொதுவான குறைபாடுகள் மீளாய்வாண்டிலும் சில மாகாணசபை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளில் அவதானிக்கப்பட்டன.

### 1.2.3 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்குகளில் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து வேறு மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடமாற்றத்தில் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படவேண்டிய ரூபா 80,587,010 கூட்டுமொத்தமான கடன் மீதிகளை அறவிடப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூன்று மாகாண அமைச்சுக்கள் மற்றும் பதினேழு திணைக்களங்கள் என்பவற்றால் ஓய்வுபெற்ற, இடைநிறுத்தப்பட்ட மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படவேண்டிய ரூபா 7,120,398 தொகையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இரண்டு திணைக்களங்கள் ரூபா 757,804 தொகையான இனங்காணப்படாத மீதிகளுடன் கணக்கிணக்கக் கூற்றுக்களை தயாரித்திருந்தன.

(ஈ) நான்கு ஆண்டுகளிற்கு மேலாக பல்வேறு வகுதியினரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 42,928,316 தொகையான நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| அமைச்சுக்கள்/ திணைக்கங்கள் | பெறவேண்டிய தொகை |
|---|---|
| | ரூபா |
| ஆளுநர் செயலகம் | 6,154 |
| மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களம் | 30,052 |

| | |
|---|---|
| விவசாயத் திணைக்களம் | 13,693 |
| வீதி அபிவிருத்தி திணைக்களம் | 64,448 |
| நீர்ப்பாசனத் திணைக்களம் | 485,747 |
| சுகாதார அமைச்சு | 455,855 |
| சுகாதார சேவைகள் திணைக்களம் | 9,953,945 |
| சுதேச மருத்துவ திணைக்களம் | 357,736 |
| கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | 1,300 |
| கல்வி அமைச்சு | 2,369,525 |
| கல்வித் திணைக்களம் | 29,189,861 |
| மொத்தம் | 42,928,316 |

**1.2.4 நிலுவையான கட்டு நிதி மீதிகளைத் தீர்த்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டிற்கான ரூபா. 4,924,903 கூட்டுமொத்த தொகையான கட்டுநிதி மீதிகள் 02 மாகாணத் திணக்களங்களால் 2013 ஒக்தோபர் 23 வரைகூடத் தீர்க்கப்படாதிருந்தன.

(ஆ) பிரிவுக்கு முன்னாரன சம்பந்தப்பட்ட கட்டுநிதி மீதிகள் வடக்கு கிழக்கு மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் தொடர்பான 2010 வரையுள்ள கட்டுநிதி மீதிகளான ரூபா 14,285,728 தொகை 2012 திசெம்பர் 31 வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.5. வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளில் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 09 வர்த்தக முற்பண கணக்கு நடவடிக்கைகளின் கணக்குகளில் காட்டப்பட்ட இருப்புக்களின் பெறுமதியை பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள் கிடைக்காமையால் அவை உள்ளபடியான இருப்புக்களின் பெறுமதியை வெளிப்படுத்துகின்றனவா என கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) மாகாணத் திறைசேரியால் 09 வர்த்தக முற்பணக்கணக்கு நடவடிக்கைகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 03 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் மட்டுமே செயற்பாட்டில் இருந்தன. இது தொடர்பாக, செயற்படாத வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளை கணக்கொழிப்பதற்கு மாகாணநிதி விதி இல. 286 இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விற்பனைநிலைய முற்பணக்கணக்கு நடவடிக்கை தொடர்பிலான ரூபா 2,341,904 தொகையான செலவு மீதிகள் நிதிக் கூற்றுக்களில் புறம்பாக காட்டப்படாமல் ரூபா 44,444,787 ஆன வரவு மீதிகளிற்கு எதிராக ஈடுசெய்யப்பட்டிருந்தது.

### 1.2.6 வைப்புக் கணக்குகளிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நி.பி 571 இன்படி, மீளாய்வாண்டின் ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் காலங்கடந்த வைப்புக்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 02 ஆண்டுகளிற்கு மேலாக மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கணக்குகளில் இருக்கின்ற ரூபா 49,320,116 தொகையான வைப்பு மீதிகள் மீது நி.பி. 571 இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இரண்டு மாகாண திணைக்களங்களின் வைப்புக்கணக்குகளிலுள்ள 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளிற்கும் நிதிக் கூற்றுக்களிற்கும் இடையில் ரூபா 17,548,828 ஆல் வித்தியாசப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்பு மீதி | ஒதுக்கீட்டுக் கணக்குகளின்படி | நிதிக் கூற்றுக்களின்படி | வித்தியாசம் |
|---|---|---|---|
| முதலமைச்சர் செயலகம் | 2,522,258 | 2,522,528 | (270) |
| சுகாதார சேவைகள் திணைக்களம் | 39,544,078 | 21,994,980 | 17,549,098 |
| | | | 17,548,828 |

### 1.2.7 வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) மாகாணப் பாடசாலைகளைத் தவிர்த்து, மாகாண அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் செயற்பாட்டிலிருந்த 102 வங்கிக் கணக்குகள் தொடர்பான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் குறிப்பிடத்தக்க அளவு தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(ii) 04 நிறுவனங்கள் சம்பந்தமாக 06 மாதங்களுக்கு மேலாக கொடுப்பனவுகளுக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா. 372,319 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக மாகாண நிதிவிதி இல. 237 இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| அமைச்சு / திணைக்களங்களின் பெயர் | சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு | 93,330 |
| முதலமைச்சர் செயலகம் | 4,445 |
| உள்ளூராட்சித் திணைக்களம் | 243,235 |
| கிராமிய கைத்தொழில் திணைக்களம் | 31,309 |
| மொத்தம் | 372,319 |

மேற்குறிப்பிட்ட ரூபா 372,319 பெறுமதியான சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் மீளாய்வாண்டின் செலவினமாக கருதப்பட்டிருந்தது.

### 1.2.8 கணக்காய்வுக்கான சான்றின்மை

கீழே காட்டப்பட்டவாறு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான 140 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2013 செப்தெம்பர் 16 வரைகூட பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

| ஆண்டு | வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களின் எண்ணிக்கை | பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்களின் எண்ணிக்கை | சதவீதம் % |
|---|---|---|---|
| 2011 | 215 | 20 | 09 % |
| 2012 | 256 | 120 | 47% |
| மொத்தம் | 471 | 140 | |

### 1.2.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(i) பேரவைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து மாகாணசபையின் ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்

2008 மே 10 இல் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை அதன் அலுவல்களை பொறுப்பேற்றிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டிற்கான மாகாண சபை நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினுடைய அறிக்கையுடன் சேர்ந்த ஆண்டறிக்கை 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின்படி 2013 செப்தெம்பர் 16 வரை சபையின் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2006 கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2 ஆம் பிரிவின்படி சகல ஐந்து அமைச்சுக்கள் மற்றும் இருபத்தியெட்டு திணைக்களங்களால் மீளாய்வாண்டுக்கான கொள்வனவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மா.நி.வி 432 இன்படி பல அமைச்சுக்கள் மறறும் திணைக்களங்களால் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மா.நி.வி 365 இன்படி 14 திணைக்களங்களால் மீளாய்வாண்டிற்கான வருடாந்த கணிப்பீட்டுச் சபைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் பற்றாக்குறை ரூபா. 321,296,432 ஆனதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா. 405,024,524 ஆனமையால் கூலிகள், சம்பளங்கள் மற்றும் ஏனைய செலவினங்கள் என்பவற்றின் குறிப்பிடத்தக்க தொகை அதிகரிப்பு காரணமாக ரூபா 726,320,956 ஆல் நிதிசார் விளைவுகளில் வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

### 2.2 நிதிசார் செயலாற்றல்

மாகாணத் திறைசேரியால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளின்படி, மீளாய்வாண்டிற்காக 05 மாகாண அமைச்சுக்கள் மற்றும் 28 திணைக்களங்களின் மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு, குறைநிரப்பு ஏற்பாட்டை உள்ளடக்கிய மொத்தத் தேறிய ஏற்பாடு, உண்மையான மொத்தச் செலவினம் மற்றும் சேமிப்புகள் என்பவை கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | மதிப்பிப்பட்ட ஏற்பாடு | குறைநிரப்பு ஏற்பாட்டை உள்ளடக்கிய தேறிய ஏற்பாடு | உண்மையான செலவினம் | சேமிப்பு | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | % |
| மீண்டெழும் | 13,521.1 | 13,618.1 | 12,807.1 | 811.0 | 5.96 |
| மூலதனம் | 1,671.0 | 1,603.0 | 1,135.0 | 468.0 | 29.29 |
| மொத்தம் | 15,192.1 | 15,221.1 | 13,942.1 | 1,279.0 | 8.40 |

### 2.3 வருமானமும் செலவினமும்

மாகாண சபையின் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான ஒட்டு மொத்த வருமானம் மற்றும் செலவினத்தின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| | 2012 | | | 2011 | | |
|---|---|---|---|---|---|---|
| | **தேறிய ஏற்பாடு** | **உள்ள படியானது** | **முரண்** | **தேறிய ஏற்பாடு** | **உள்ள படியானது** | **முரண்** |
| **வருமானம்** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** | **ரூபா (மில்)** |
| அரசாங்க மானியங்கள் | 11,482 | 10,737 | 745 | 12,410 | 10,952 | 1,458 |
| ஏனையவை | 2,236 | 1,805 | 431 | 1,059 | 1,552 | (493) |
| | 13,718 | 12,542 | 1,176 | 13,469 | 12,504 | 965 |
| **செலவினம்** | | | | | | |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் | 10,891 | 10,483 | 408 | 10,084 | 9,829 | 255 |
| ஏனையவை | 2,727 | 2,324 | 403 | 2,446 | 2,246 | 200 |
| உப மொத்தம் | 13,618 | 12,807 | 811 | 12,530 | 12,075 | 455 |
| மூலதனச் செலவினம் | 1,603 | 1,135 | 468 | 1,588 | 1,253 | 335 |
| முழுமொத்தம் | **15,221** | **13,942** | **1,279** | **14,118** | **13,328** | **790** |

### 2.3.1 உண்மையான ஆளணி

மாகாணசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டு மொத்த அங்கீகரித்த மற்றும் உண்மையான ஆளணி என்பன கீழே தரப்படுகின்றன.

(i) மாகாணசபை நிறுவனங்களின் பதவியினர் (பாடசாலைகள் தவிர்ந்த)

| | **அங்கீகரிக்கப்பட்ட ஆளணி** | **உண்மையான ஆளணி** | **குறைவு/ (மேலதிகம்)** |
|---|---|---|---|
| பதவிநிலை தரங்களும் துணைநிலைத் தரங்களும் | 26,191 | 24,846 | 1,345 |

| | | | |
|---|---|---|---|
| சிற்றூழியர் தரங்கள் | 4,045 | 4,448 | (403) |
| மொத்தம் | 30,236 | 29,294 | 942 |

403 எண்ணிக்கையான சிற்றூழியர் தர ஊழியர்கள் மிகையாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

## 2.4 செயற்பாட்டு மீளாய்வு

மீளாய்வாண்டின் போது கிழக்கு மாகாண சபையின் சில மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.4.1 மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு 2012 திசெம்பர் 30 ஆந் திகதிய பிரீ/17/2012 ஆம் இலக்க மாகாண திறைசேரி சுற்றறிக்கையின்படி 2013 செப்தெம்பர் 16 வரைகூட கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2. மாகாண பேரவைச் செயலகம்

(அ) 2008 யூலை 25 ஆம் திகதிய 16/2008 ஆம் இலக்க மாகாண திறைசேரிச் சுற்றறிக்கைக்கு முரணாக மீளாய்வாண்டின் போது 05 மாகாண அமைச்சுக்கள் ஊடாக அவர்களுடைய மாதாந்த சம்பளங்கள், எரிபொருள்படி மற்றும் ஏனைய படிகளிற்கு மேலதிகமாக 23 மாகாண சபை உறுப்பினர்ககளிற்கு மாதந்த எரிபொருள்படியாக ரூபா 8,280,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பின்வரும் காரணங்களினால் இந்தக் கொடுப்பனவுகள் முறையற்ற கொடுப்பனவுகளாக கருதப்பட்டுள்ளது

- கொடுப்பனவுகளிற்கான அதிகாரம் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

- மாகாண சபையின் ஒவ்வொரு உறுப்பினர்களாலும் மாகாண அமைச்சுக்கள்/ திணைக்களங்களிற்கான ஒருங்கிணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையோ அல்லது சேவைகள் வழங்கப்பட்டிருந்தனவோ என நிரூபிப்பதற்கு எவ்வித சான்றுகளும் இல்லை.

- மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்பு வேலைகளிறகான உறுப்பினர்களின் வருகை கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) 2001 மார்ச் 28 ஆந் திகதிய 1/2001 ஆம் இலக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபை சுற்றறிக்கையின்படி இரண்டு உத்தரவாதங்களை கருத்திற்கொள்ளாமல் 2010 இலிருந்து 2012 ஆண்டு வரை உறுப்பினர்களிற்கான கடனாக ரூபா 7,820,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் தற்போது மாகணசபை உறுப்பினர்கள் அல்லாத உறுப்பினர்களிடமிருந்தான ரூபா 969,178 கடன் மீதிகள் 2013 செப்தெம்பர் 16 வரைகூட தீர்க்கப்படாதிருந்தது.

### 2.4.3 முதலமைச்சர் செயலகம்

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் 250 வேலையற்ற இளைஞர்களிற்கு கொரிய மொழி வகுப்புக்கள் நாடத்துவதற்காக 2008 ஆம் ஆண்டின் போது மாகாண சபை நிதிகளிலிருந்து முற்பணமாக ரூபா 2,000,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கொரிய மொழி வகுப்புக்கள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் பாடநெறிகள் திட்டமிடப்பட்டவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் 2013 செப்தெம்பர் 16 வரைகூடமுதலமைச்சரின் முன்னாள் செயலாளரிற்கு செலுத்தப்பட்ட முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 யூலை 25 ஆந்திகதிய 16/2008 ஆம் இலக்க மாகாண திறைசேரிச் சுற்றறிக்கைக்கு முரணாக 2008 செப்தெம்பர் முதல் 2012 யூலை வரையான காலத்தின் போது பிரதம செயலாளரின் வாகனங்களின் பாவனைக்காக எரிபொருள் கட்டணங்களிற்காக ரூபா 7,201,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 2.4.4 மாகாணத் திறைசேரி

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

நிதி ஏற்பாடுகளிற்கு மேலாக செலவினம் செய்யப்பட்ட பல சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன. பாதீட்டு ஏற்பாடுகளை விஞ்சி ஏற்பட்ட செலவினங்களை ஒழுங்குபடுத்தும் நோக்கில் பல குறைநிரப்பு மதிப்பீடுகள் பல்வேறு மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களிற்கு திறைசேரி நானாவித வாக்குப்பணத்திலிருந்து நிதிகளை மாற்றுவதற்காக தயாரிக்கப்பட்டிருந்தது, ஆதலால் பாதீடானது யதார்த்த அடிப்படையில்

தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பாதீடானது வினைத்திறனுடைய நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமையைக் குறிக்கின்றது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

- மாகாண திறைசேரியால் நானாவித வாக்குப்பணத்திலிருந்து 34 குறைநிரப்பு மதிப்பீடுகள் ஊடாக கல்வித் திணைக்களம், சுகாதரத் திணைக்களம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் போன்ற அத்தகைய பல்வேறு மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு ரூபா 74,536,455 தொகையான நிதிகள் மாற்றப்பட்டிருந்தது.

- மாநிவி 45 இன் கீழ் 59 எண்ணிக்கையான விணப்பங்கள் நிதிகளின் மாற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மாநிவி 45 இற்கு பதிலாக நி.பி -66 ஆக நிதிகளின் மாற்றத்திற்கான விண்ணப்பங்கள் காட்டப்பட்டிருந்தது.

- 05 மாகாண அமைச்சுக்கள் மற்றும் 28 திணைக்களங்கள் என்பவற்றின் அரசாங்க உத்தியோகத்தர்களிற்காக முற்பணக் கணக்குகள் மற்றும் வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் எல்லைகள் ஆறு சந்தர்ப்பங்களில் பிரதம செயலாளர் மற்றும் பிரதி பிரதம செயலாளர் - நிதி என்போரால் திருத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாகாண அரச சேவை உத்தியோகத்தர்களால் ரூபா 534,105,799 தொகையான விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான (டபிள்யூ&ஓபி) பங்களிப்புகள் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்காததுடன் மாகாண திறைசேரியின் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) மாகாண வருமானத் திணைக்களம்

---

(i) 2012 திசெம்பர் 09 ஆந் திகதிய 222/2012 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின்படி மீளாய்வாண்டிற்கான வருடாந்த வருமானக் கணக்குகள் 2013 செப்தெம்பர் 16 வரைகூட கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாகாண நிதிவிதி 144(2) இன்படி மாகாண வருமானத் திணைக்களத்தால் வருமானக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மாகாண நிதிவிதி

142 இன்படி நிலுவை வருமானத்தின் அரையாண்டு ரீதியான திரட்டுகளும் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண திறைசேரிக்கு அனுப்பப்படாமல் திணைக்களத்தின் வங்கி சேமிப்புக் கணக்கில் ரூபா 566,363,123 ஆன தொகை பயன்பாடின்றியிருந்தது. இது சம்பந்தமாக சேமிப்புக் கணக்கிலிருந்து உருவாக்கப்பட்ட ரூபா 20,950,712 தொகையான வட்டி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.4.5 கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

பின்வரும் சொத்து விடயங்கள் நீண்டகாலமாக குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| | அளவு | | | | |
|---|---|---|---|---|---|
| **மிருகவைத்திய அறுவைச்சிகிச்சை அலுவலகத்தின் பெயர்** | **ஏ 1 / கான்** | **10/ மில்க் கான்** | **தட்டெழுத்து இயந்திரம்** | **மைக்ரோ ஸ்ரதஸ்க்கோப்** | **அறுவைச் சிகிச்சை நிலைய விளக்கு** |
| அக்கரைப்பற்று | 07 | 03 | 01 | 01 | - |
| ஆலையடிவேம்பு | - | 02 | | 01 | 01 |
| இறக்காமம் | 03 | | | | |
| | 10 | 05 | 01 | 02 | 01 |

### 2.4.6. கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்

(அ) பின்வரும் நெசவு நிலையங்களில் கைத்தறி நிலையங்களின் ஆறு கட்டிடங்கள், 98 நெசவு இயந்திரங்கள் மற்றும் 13 நூல் நூற்கும் இயந்திரங்கள் என்பன பயனற்று இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

| **நெசவு நிலையம்** | **நெசவு இயந்திரங்கள்** | **கட்டிடங்கள்** | **நூல் நூற்கும் இயந்திரங்கள்** |
|---|---|---|---|
| பெரியதும்முனை | 06 | - | - |
| பட்டித்திடல் | 02 | - | - |
| அம்பாறை | 04 | - | - |

| | | | |
|---|---|---|---|
| மல்வத்தை | 01 | - | - |
| தமன | 05 | - | - |
| ஆலையடிவேம்பு | 36 | - | - |
| நிந்தாவூர் | 08 | - | - |
| காரைதீவு | 04 | - | - |
| சம்மாந்துறை | 06 | - | - |
| வீரமுனை | 04 | - | - |
| ஒலுவில் | 01 | - | - |
| குறிங்காகேணி | 03 | 01 | 07 |
| செருநுவர | 11 | 01 | 03 |
| கந்தளாய் | 07 | 01 | 03 |
| வெள்ளைமணல் | - | 01 | - |
| சாம்பல்தீவு | - | 01 | - |
| பூவரசன்தீவு | - | 01 | - |
| | 98 | 06 | 13 |

(ஆ) ஆலையடிவேம்பு நெசவு நிலையத்தில் முறையற்ற முகாமைத்துவம் காரணமாக ரூபா 1 மில்லியன் தொகைக்கு மேலான நெசவுப் பொருட்களின் செல்லுபடியாகும் காலம் காலவதியாகியிருந்தது.

(இ) விநாயகபுரம் தும்பு நிலையத்தில் 06 மாதங்களிற்கு அதிகமான காலம் 05 மின்னியல் தும்பு தயாரிப்பு இயந்திரங்கள் பயனற்று இருக்க அனுமதிக்கபட்டிருந்தது.

### 2.4.7 கல்வி, கலாசார அலுவல்கள், காணி அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து அமைச்சு

தெயட்ட கிருல கண்காட்சி 2012 பெப்ரவரி 04 இலிருந்து பெப்ரவரி 11 வரை நடைபெற்றிருந்தது. கண்காட்சி பூர்த்தியான பின்னர் 2012 பெப்ரவரி 18 இல் தெயட்ட கிருலவிற்கான ஒளி மற்றும் ஒலி முறைமைக்காக கேள்விகள் பெறப்பட்டிருந்தது. மேலும், கேள்விச் சபைக் கூட்டமும் நடைபெற்றிருந்தது.

## 2.4.8 கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

(அ) நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பதில் தாமதம்

கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் 2009 இன் 02 ஆம் இலக்க நியதிச்சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின்படி நிதியாண்டு முடிவடைந்த பின்னர் ஆறு மாதங்களிற்கிடையில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய 2011 ஆம் ஆண்டிற்கான கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்கள் 2013 செப்தெம்பர் 09 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்கானவை 2013 செப்தெம்பர் 16 வரைகூட கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அனுமதிப்பத்திர மாற்ற கட்டணங்கள் குறைவாக அறவிடப்பட்டமை

சட்ட ரீதியான உரித்தல்லாத நபர் ஒருவருக்கு பயணிகள் சேவை அனுமதிப்பத்திர மாற்றத்திலிருந்து செலுத்த வேண்டிய கட்டணங்கள் 1757/02 ஆம் இலக்க அதிவிசே அரசாங்க வர்தமானி அறிவித்தல் மூலம் 2012 மே 08 இலிருந்து செயற்படுமாறு ரூபா 100,000 ஆக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட வர்த்தமாணி அறிவித்தல்களிற்கு முரணாக 2013 மே 31 வரை அம்பாறை மாவட்டத்தில் அத்தகைய நபர்களிடமிருந்து ரூபா 50,000 மாத்திரமே அறிவிடப்பட்டிருந்ததன் விளைவாக், ரூபா 250,000 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(இ) முகாமைத்துவத்தின் குறைவான பொறுப்பாண்மை

அம்பாறை மாவட்ட அலுவலகத்தால் பேணப்பட்ட பதிவேடுகளின்படி, கீழே குறிப்பிடப்பட்ட வாகனக் கோவைகள் பெயர் மாற்றங்கள் மற்றும் ஏனையவைகளிற்காக தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், கோவைகள் கீழே தரப்பட்ட விபரங்களின்படி நீண்ட காலமாக நடவடிக்கை எடுக்கப்படாமல் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

| | 2013 யூலை 15 வரை | 2012 ஆம் ஆண்டு | 2011 ஆம் ஆண்டு |
|---|---|---|---|
| பெயர் மாற்றங்களிற்கான கோவைகளின் எண்ணிக்கை | 03 | 12 | 02 |

| | | | |
|---|---|---|---|
| ஏனையவைகளிற்கான கோவைகளின் எண்ணிக்கை | 07 | 03 | 02 |

(ஈ) அனுமதிப்பத்திர மாற்றங்கள் தொடர்பான கட்டணங்கள் கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட அலுவலகத்தினால் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் 2010 நவம்பர் 25 ஆந் திகதிய 2010.05 ஆம் இலக்க பிரதேச சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின்படி பணிப்பாளர் நாயகம் அல்லது பணிப்பாளரின் (செயற்பாடு மற்றும் திட்டமிடல்) அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் சேகரிக்கப்பட்டிருந்தன.

### 2.4.9 மாகாண கல்விப் பணிப்பாளர் திணைக்களம்

(அ) வலயக் கல்வி அலுவலகம் - திருகோணமலை

(i) பாரிய நில வேலைகளில் ஈடுபடுத்துவதற்கு புல்டோசர் டி8 இன் 40 மணித்தியாலங்களிற்காகமதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. ஆனால், 80 மணித்தியாலங்கள் செலவழித்திருந்ததுடன் டி4 புல்டோசர் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மாற்றங்களிற்கான அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 8 மணித்தியாலங்களிற்காக “பக்கோ- 200 குதிரை சக்தி” மூலம் அத்திவார வேலைகளிற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 13 மணித்தியாலங்களிற்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மிகைகளிற்கான அங்கீகாரம் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(iii) உடன்படிக்கையின்படி, பூர்த்தியாக்கல் திகதி 2011 செப்தெம்பர் 15 ஆக இருந்தது. எவ்வாறாயினும், உள்ளபடியான பூர்த்தியாக்கல் திகதி 2011 நவம்பர் 03 ஆக இருந்ததுடன் 2011 செப்தெம்பர் 15 இலிருந்து ரூபா 22,572 தொகையான தாமதக் கட்டணங்கள் கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) உப ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்ட வேலைகள்

2006 கொள்வனவு கைநூலின் 3.9.1 ஆம் பிரிவு மற்றும் 2011 செப்தெம்பர் 27 ஆந்திகதிய 452 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை என்பவற்றிற்கு முரணாக பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களால் (எஸ்டிஎஸ்) உப ஒப்பந்தகாரர்களிற்கு ரூபா 7,009,505 மொத்தமான நிர்மாண வேலைகள் வழங்கப்பட்டிருந்தன.

(v) பாடசாலை அபிவிருத்தி சங்கங்களிற்கு நேரடி ஒப்பந்தம்

2006 கொள்வனவு கைநூலின் 3.9.1 ஆம் பிரிவின்படி, வேலைகள் சங்கங்களின் அதிகார எல்லைக்குள் மற்றும் வரம்புக்குள் இருக்க வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 5,045,608 மொத்தமான 11 வேலைகள் மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களிற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) வலயக் கல்வி அலுவலகளம் -மூதூர்

(i) மாநி.வி 219(2) இற்கு முரணாக நீண்டகாலமாக ரூபா 207,300 தொகை தீர்க்கப்படாத முற்பணங்களாக இருந்தன.

(ii) மாநி.வி 570 மற்றும் 571 என்பவற்றின்படி நடவடிக்கை எடுக்கப்படாமல் 2000 முதல் 2010 வரையான ரூபா 1,896,271 தொகை வைப்புக் கணக்கில் இருந்தது.

(iii) உத்தியோகத்தர்களால் முன்னைய முற்பணங்கள் தீர்க்கப்படாமல் இருந்த போதிலும் கூட உப கட்டுநிதி முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், மாநிவி 371 இற்கு முரணாக ரூபா 50,000 இற்கு அதிகமாக உப கட்டுநிதி முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தது.

(இ) வலயக் கல்வி அலுவலகம் -கந்தளாய்

(i) இனங்காணப்படாத கொடுப்பனவுகளாக 2012 யூன் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் ரூபா 248,421.20 தொகை காட்டப்பட்டிருந்தது. கொடுப்பனவுத் திகதி 2006 ஒக்தோபர் 31 ஆக இருந்த போதிலும் அந்த காலாவதிக்கான காரணங்கள் புலனாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நி.பி 570 இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமல் 2002 இலிருந்து வைப்புக் கணக்கில் ரூபா 1,606,034.82 தொகை இருந்தது.

### 2.4.10 சுகாதார மற்றும் சுதேசய வைத்திய அமைச்சு

(அ) துவிச்சக்கர வண்டிகளின் கொள்வனவு ரூபா 390,600

2012 வருடாந்த அமுலாக்கல் நிகழ்ச்சிதிட்டத்தின்படி, பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் (டிஎஸ்) பிரிவில் தெரிவு செய்து பயிற்சியளிக்கப்பட்ட இளைஞர்களிற்காக கருவிகள் தொகுதியின் ஏற்பாடுகளிற்காக பிரமாண அடிப்படை மானியங்களின் (சீபீஜீ) கீழ் ரூபா 400,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், துவிச்சக்கர வண்டிகள் பின்வருமாறு வழங்கப்பட்டிருந்தன.

| பிரதேச செயலகம் | துவிச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஏறாவூர் | 26 |
| மூதூர் | 05 |
| பட்டணமும் சூழலும் - ஆலங்குளம் | 05 |

(ஆ) 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின்படி, 2012 இன் பாதீட்டு ஏற்பாட்டிற்குள் எரிபொருள் செலவினம் இருக்க வேண்டியதுடன் 2012 சனவரி மாதத்தில் ஏற்பட்ட செலவினத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதெனவும் உறுதிப்படுத்துவதற்கு அமைச்சின் செயலாளர் பொறுப்பாக உள்ளார். சனவரி மாதத்தில் ஏற்பட்ட செலவினத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளார். எவ்வாறாயினும் வாக்குப்பண இல. 950-03-02-1202 எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் செலவினம் ஒவ்வொரு மாதமும் அதிகரித்திருந்ததுடன் மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு முரணாக பாதீட்டில் 85 % ஆக இருந்த) வீரமன் நடைமுறை மூலம் மேலதிகமாக ரூபா 510,000 மாற்றப்பட்டிருந்தது.

### 2.4.11 மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்பு மீதியாக ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 39,544,078 தொகை காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ரூபா 21,994,980 மாத்திரமே குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) 2010 யூன் 01 இலிருந்து 2011 திசெம்பர் 31 வரையான காலத்திற்கு கணனிகள் பராமரிப்பதற்காக 2010 யூன் 01 இல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் நெற்கொம் ரெக்நொலோயிஸ்சிற் இடையில் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்ததுடன் மாதாந்தம் ரூபா 200,000 தொகையான கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சகல கணனிகள் மற்றும் அச்சு இயந்திரங்கள் உடன்படிக்கையின்படி தொழில்நுட்ப நபர்களால் பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மனித வள முகாமைத்துவம்

கீழே தரப்பட்ட விபரங்களின்படி, மருத்துவ உத்தியோகத்தர்கள், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள், தரம் II தாதிமார், உதவியாளர்கள், ஆய்வு கூட வேலையாள், காவலாளிகள், சாரதிகள், சிற்றூழியர் போன்ற அத்தகைய 192 உத்தியோகத்தர்கள் ஆளணி அங்கீகாரம் இல்லாமல் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

| | **அங்கீகரித்த ஆளணி** | **உள்ளபடியானது** | **மிகை** |
|---|---|---|---|
| பொது வைத்தியசாலை – திருகோணமலை | 199 | 291 | 92 |
| ஆதார வைத்தியசாலை – கந்தளாய் | 63 | 73 | 10 |
| ஆதார வைத்தியசாலை – மூதூர் | 31 | 65 | 34 |
| கிராமிய வைத்தியசாலை- தம்பலகாமம் | 30 | 14 | 16 |
| ஆதார வைத்தியசாலை – கிண்ணியா | 29 | 69 | 40 |
| | 352 | 512 | 192 |

(ஈ) உணவு வழங்கல்

முறையான அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் உணவு மூலப்பொருள் வழங்கல் பரிசோதிக்கப்பட்டிருக்காததுடன் பொது வைத்தியசாலை- திருகோணமலை, ஆதார வைத்தியசாலை- மூதூர், கிராமிய வைத்தியசாலை- தம்பலகாமம், கிராமிய வைத்தியசாலை-

புல்மோட்டை, ஆதார வைத்தியசாலை- கின்னியா மற்றும் கிராமிய வைத்தியசாலை- ஈச்சிலம்பற்று எனபவற்றில் உணவுப் பதிவேடுகள் முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆதார வைத்தியசாலை- திருகோணமலை

2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்கான கணப்பீட்டுச் சபை மாநிவி 365 இன்படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பொது வைத்தியசாலை- கந்தளாய்

(i) நி.பி 570 மற்றும் 571 என்பவற்றின்படி நடவடிக்கை எடுக்காமல் 3 ஆண்டுகளிற்கு மேலாக வைப்புக்கணக்கில் ரூபா 123,798 தொகை வைக்கப்பட்டிருந்தது.

(ii) மின்பிறப்பாக்கியொன்று இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தாமல் களஞ்சியத்தில் பயனற்றுக் காட்டப்பட்டிருந்தது.

(iii) கந்தளாய் ஆதார வைத்தியசாலை களஞ்சியத்தில் பயன்படுத்தாமல் இருந்த 40 எண்ணிக்கையான காலாவதியான மருந்து விடயங்களை அழிப்பதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) எம்ஓஎச் அலுவலகம்

எம்ஓஎச் அலுவலக மருந்து களஞ்சியத்தில் 2012 நவம்பர் 22 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வில், கீழே காட்டப்பட்ட விபரங்களின்படி குறைவு மற்றும் மிகைகளாக பெறுமதிமிக்க மருந்துகள் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இவற்றை புலனாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| **விடயங்கள்** | **புத்தக மீதி அளவு** | **உள்ளபடியான மீதி அளவு** | **குறைவு அளவு** | **மிகை அளவு** |
|---|---|---|---|---|
| போலிக் அசிட் | 1000 | 10000 | - | 9000 |
| பெறெனொர் சினப்பர் (பிரவ்ஸ் கலிப்பவுட்) | 6000 | 5000 | 1000 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| விட்டமின் பீ | 4000 | 2000 | 2000 | - |
| கல்சியம் லகற் | 12000 | 11000 | 1000 | - |

(ஏ) பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்

மாநிவி 365 இன்படி 2010 இலிருந்து பொதுக் களஞ்சியம் மற்றும் 2009 இலிருந்து அறுவைசிகிச்சை விடயங்கள் என்பவற்றிற்கான கணிப்பீட்டுச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.4.12 சுதேச மருத்துவ திணைக்களம்**

முறையான அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் உணவு மூலப்பொருள் வழங்கல் பரிசோதிக்கப்பட்டிருக்காததுடன் வாட்டுக்களில் உணவுப் பதிவேடுகள் முறைப்பபடி பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், வைத்தியர்களால் சிபார்சு செய்யப்பட்டவாறு உணவு வழங்குநர்களால் உணவு வழங்கல் பட்டியல் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**2.4.13 கட்டிடங்கள் திணைக்களம்**

முற்பணக் கொடுப்பனவுகள்

பின்வரும் முற்பணக் கொடுப்பனவுகள் செலவின மதிப்பீடுகள் இல்லாமல் திருகோணமலை கட்டிடங்கள் திணைக்களதால் செய்யப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **நோக்கம்** | **செலுத்தப்பட்ட தொகை** |
|---|---|
| | **ரூபா** |
| கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டி | 20,000 |
| முகாமைத்துவ கட்டணங்களிற்கான கட்டுநிதி | 300,000 |
| மீண்டெழும் வேலைகளிற்கான கட்டுநிதி விடுவிப்பு | 175,000 |
| மீண்டெழும் வேலைகளிற்கான கட்டுநிதி விடுவிப்பு | 100,000 |

**2.5 நிதிகளின் பயன்பாடு**

மாகாண சபை அலுவலகங்களின் அபிவிருத்தி வேலை முன்மொழிவுகளுக்காக பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகள் மற்றும் அதன் மீது ஏற்பட்ட உள்ளபடியான செலவினம் என்பவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

எவ்வாறாயினும் குறித்த நோக்கங்களிற்காக மிகுதி பணத்தினைப் பயன்படுத்தவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | **விடயத்தின் விபரம்** | **தேறிய ஏற்பாடு** | **உள்ள படியான செலவினம்** | **சேமிப்பு** | **பயன்பாடற்ற நூற்றுவீதம்** |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| (i) | மாகாண குறித்த அபிவிருத்தி மானியங்கள் (பிஎஸ்டிஜீ) | 857,000,000 | 610,000,000 | 247,000,000 | 28.82 |
| (ii) | சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டம் (எச்எஸ்டிபி) | 5,000,000 | - | 5,000,000 | 100.00 |
| (iii) | ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யூனிசெவ்) | 167,000,000 | 159,593,539 | 7,406,461 | 4.44 |
| (iv) | பிரமாண அடிப்படையிலான மானியம் (சிபிஜீ) | 267,000,000 | 145,780,000 | 121,220,000 | 45.40 |
| (v) | வறுமை ஆதரவு கிராமிய அபிவிருத்தி செயற்திட்டம்/ ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் (யூஎன்எவ்பிஏ) | 23,000,000 | 5,227,248 | 17,772,752 | 77.27 |
| (vi) | 1000 பாடசாலைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் தாபிப்பு (இலங்கை அரசாங்கம் மற்றும் டபிள்யூபீ) | 144,000,000 | 125,000,000 | 19,000,000 | 13.19 |
| (vii) | இலங்கை அரசாங்கம் | 40,000,000 | 32,760,000 | 7,240,000 | 18.10 |

## 2.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

ஒரு அமைச்சு மற்றும் ஒரு திணைக்களங்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவழிக்கப்பட வேண்டிய நட்டங்கள் மற்றும் இனங்காணப்பட்ட சேதங்களாக ரூபா. 1,354,424 தொகை அறிக்கையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மாகாண நிதி விதி 69 இன்படி நட்டங்களைக் பதிவழிக்க சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 உள்ளூராட்சி அதிகாரசபையின் செயற்பாடுகள் மீதான மேற்பார்வை

இலங்கை அரசியல் யாப்பின் பதின்மூன்றாம் திருத்தத்தின் எட்டாவது பட்டோலையின் 4.2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, மாகாணத்தின் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வை மாகாணசபைக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. உள்ளூராட்சி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் தலைவர்களது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிழக்கு மாகாணத்திலுள்ள 45 உள்ளூராட்சி அதிகாரசபைகளில் 03 உள்ளூராட்சி அதிகாரசபைகள் மீளாய்வாண்டிற்கான வருடாந்தக் கணக்குகளை 2013 செப்தெம்பர் 16 வரைகூட கணக்காய்விற்காக சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது தலைமைச் செயலாளர் அல்லது கிழக்கு மாகாணசபையின் உள்ளூராட்சி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் உள்ளகக் கணக்காய்வுக்காக ஒரு வினைத்திறனும் அர்த்தமுள்ள முறைமையை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சந்தைக்கட்டிட நிர்மாணம் - ரூபா 5.84 மில்லியன்

ரூபா 5,830,887 கிரயத்தில் திருகோணமலை நகரசபையால் நிர்மாணிக்கப்பட்ட சந்தைக் கட்டிடம் 08 ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாமல் இருக்கின்றதுடன் வேறு நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகின்றது.

(ஈ) வருமான நிலுவைகள் - ரூபா 249,826,198

கீழே தரப்பட்ட விபரங்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிழக்குமாகாணத்திலுள்ள 45 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வீதவரி, வாடகைகள் மற்றும் ஏனைய வருமானங்களின் நிலுவைகள் அறிக்கையிடப்பட்டன.

| உள்ளூராட்சி | உள்ளூராட்சி அதிகார | தொகை |
|---|---|---|

| **அதிகாரசபை** | **சபைகளின் எண்ணிக்கை** | |
|---|---|---|
| | | **ரூபா** |
| மாநகர சபைகள் | 3 | 69,906,885 |
| நகரசபைகள் | 5 | 104,438,116 |
| பிரதேச சபைகள் | 37 | 119,166,970 |
| மொத்தம் | 45 | 293,511,971 |

இது தொடர்பாக, சம்பந்தப்பட்ட உள்;ராட்சி அதிகார சபைகளால் ரூபா 293,511,971 தொகையான நிலுவையாகவுள்ள வருமானங்களை சேகரிப்பதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நீதி மன்ற தண்டப்பணங்களும் முத்திரை தீர்வைகளும்

நியதிச்சட்ட ஏற்பாடுகளின்படி உள்ளூராட்சி அதிகாரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நீதி மன்றங்களால் விதிக்கப்பட்ட தண்டப்பணங்கள் மற்றும் மாகாண சபை அல்லது உள்ளூராட்சி அதிகாரசபைகளால் விதிக்கப்பட்ட ஆதனங்கள் மாற்றம் தொடர்பான முத்திரைத் தீர்வைகள் என்பன உரிய காலத்தில் ஆவண்டப்பட்டமை காரணமாக உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு அனுப்பப்படாமல் அவர்களால் வைத்திருக்கப்பட்டன. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்காத நீதிமன்ற தண்டப்பணங்களினதும் முத்திரை தீர்வைகளினதும் விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| **உள்ளூராட்சி அதிகாரசபைகள்** | **தொகை** |
|---|---|
| | **ரூபா** |
| மாநகர சபைகள் | 28,963,646 |
| நகரசபைகள் | 27,374,545 |
| பிரதேச சபைகள் | 77,813,009 |
| மொத்தம் | 134,151,200 |

(ஊ) உள்ளூராட்சி அதிகார சபைகளின் கணக்குகள் தொடர்பாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பொதுவான குறைபாடுகள் கீழே பொழிப்பாக்கப்படுகின்றன.

(i) மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் புலனாய்வு உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் மீது மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் போதிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ii) வங்கிக்கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரித்தலில் அசாதாரண தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிகள் துணையேடுகள் அல்லது பதிவேடுகளில் காட்டப்பட்ட மீதிகளுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) உத்தியோகபூர்வ வாகனங்களை உயயோகிக்க உரித்தற்ற பல உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் உத்தியோக பூர்வ வாகனங்களை உபயோகித்திருந்தனர்.

(v) உள்ளூராட்சிச் சபைகள் தமது சொந்த தொழிலாளர் அணியைப் பயன்படுத்தி நிருமாண வேலைகளை நிறைவேற்றியிருந்தன. எனினும் முறையான வேளைத்தள்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால் பதிவேட்டுப் பொருட் கட்டுப்பாடு அல்லது இருப்புக் கட்டுப்பாடு எதுவும் இருக்கவில்லை. இதன் காரணமாக, இருப்பு நிலைமை மெய்மையாய்வு மற்றும் இருப்பின் குறைவுகள் / மேலதிகங்களை என்பவற்றை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மா.நி.வி 101 இன்படி மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களத்தால் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் தயாரிப்பின்போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்தாலோசிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களத்தால் அறிக்கையிடப்பட்ட பல விடயங்கள் மீது மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் அர்த்த புஷ்டியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

ஆளணி முகாமைத்துவம், பாதீடு, செலவினம், கொடுப்பனவுகள், மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள், வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகள், சொத்துக்களின் முகாமைத்துவம், கணக்குப் பதிவேடுகளின் பேணுகை, வங்கிக் கணக்குகள் மற்றும் கட்டுநிதி என்பவற்றின் கட்டுப்பாடு, வாகனங்களின் பயன்படுத்துகை, உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் போன்றவற்றிலுள்ள முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகளில் அவதானிக்கப்பட்ட பலவீனங்கள் காலத்திற்குக் காலம் வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் தொடர்புடைய அமைச்சுக்களின் செயலாளர்களினதும் தலைமைச் செயலாளரினதும் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன.